Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 22 உ. சனிக்கிழமை (06-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 213

# ஈழ அகதிகள் குறித்துப் பேச மந்திரி ஹேரத் புதுடில்லிக்கு!

## விரைவில் விஜயம் என்று அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 6

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகள் விவகாரம் உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் விரைவில் புதுடில்லிக்கு விஜயம் செய்வார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய — ஸ்ரீலங்கா பொருளாதாரப் பிரச்சினை, தீவிரவாதிகளின் செயற்பாடுகளினால் ஏற்பட்டுள்ள நெருக்கடி ஆகியவை உட்பட இரு தரப்புச் சம்பந்தப்பட்ட முக்கிய விவகாரங்கள் குறித்து மந்திரி ஹேரத் புதுடில்லி அரசுடன் விரிவாகப் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(3 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை தமிழர்களுக்கு உணவு அனுப்பத் தடை!

## மூதூர் தமிழரை வெளியேற உத்தரவு

கொழும்பு, ஜூலை 6

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல தமிழ்க் கிராமங்களுக்கு நிவாரணப் பொருட்களைக் கூட எடுத்துச் செல்ல விடாமல் இராணுவத்தினர் தடுக்கின்றனர். அதனால் மக்கள் பட்டினி கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த எட்டுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் முகாமையாளர்கள் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதனால் தமிழ் அகதிகள் தங்கியுள்ள பல முகாம்களுக்கும், ஏனைய மக்களுக்கும் உணவுப் பொருள்கள் கிடைப்பது பெரும் முயற்கொம்பாக உள்ளது.

இதற்கிடையில் மூதூர்ப் பகுதியில் உள்ள சுமார் 4,000 தமிழ் மக்களை அங்கிருந்து வெளியேறி கிளப்பன்பேர்க் அகதி முகாமுக்குச் செல்லுமாறு இராணுவம் உத்தரவிட்டிருக்கிறது.

கிளப்பன்பேர்க் முகாம் சுகாதார வசதி குறைந்தது

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா கடற்படையினர்

# தரமற்ற குண்டுகள் வாங்கி ரூபா 4 கோடி வீண் விரயம்!

கொழும்பு, ஜூலை 6

கடற்படையினர் தரங்குறைந்த குண்டுகளை மற்றும் வெடி மருந்துப் பொருள்களை வாங்கியதாகக் கிடைத்துள்ள முறைப்பாடு குறித்து கணக்காய்வாளர் நாயகம் விசாரணை நடத்தவுள்ளார்.

சீனத் தயாரிப்பான பீரங்கிப் படகுகளுக்குத் தேவையான 37 மி. மீ. ரகக் குண்டுகளைக் கடற்படையினர் பாகிஸ்தானிலிருந்து கொள்வனவு செய்தனர் என்றும்—

4 கோடி 40 லட்சம் ரூபா பெறுமதியான அந்தக் குண்டுகள் கடந்த ஆறு மாதங்களாக திருகோணமலையில் பாவிக்கப்படாமல் தேங்கிக் கிடப்பதாகவும்— சொல்லப்படுகிறது.

ஆயுதங்கள் மற்றும் அவற்றுக்குத் தேவையான குண்டுகள் மற்றும் வெடி மருந்துப் பொருள்களை வாங்குவது சம்பந்தமாக நியமிக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சுக் குழு

(3 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு செட்டித்தெருவில் 100 தமிழர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 6

கடந்த திங்கட்கிழமை மட்டும் கொழும்பு செட்டித்தெரு பகுதியில், நகைக் கடைகளில் வேலை செய்யும் சுமார் 100 தமிழர்களைப் படையினர் கைது செய்துள்ளனர்.

கோட்டைப் பொலீஸ் நிலையத்தில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

## முச்சந்தி முரளி



உவையருக்கு "ரிபத்" சாப்பிட ஆசை வந்... போல...!

# செய்திச் சாரம்

## வவுனியாவில் பயணிகள் தங்க புதிய இடம்!

வவுனியா நகர சபைக் கட்டடத்தில் இயங்கி வந்த அகதி முகாம் எல்லப்பர் மருதங்குளத்துக்கு மாற்றப்பட இருக்கிறது.

இதேவேளை—

கொழும்பு ரயில் பயணிகள் தங்குவதற்காக ரயில் நிலையத்துக்கு அருகில் - ப. நோ. கூ. சங்க கட்டடத்தில் - தங்குமிடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. [ஓ-3]

## புளொட்காரர் இருவர் பலி

நொச்சிமோட்டையில் வார இறுதியில் நடந்த மோதலில் இரு புளொட் உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

செட்டிகுளத்தைச் சேர்ந்த இந்திரவேலு [சேகர்], திருகோணமலையைச் சேர்ந்த இராமநாதன் ஆகியோரே இறந்தவர்கள் ஆவர். [ஓ-3]

## இரு தமிழர் படுகொலை

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சூரக்குடா, கூனித்தீவு பகுதிகளை கடந்த மாதம் 30 ஆம் திகதி சுற்றிவளைத்த இராணுவத்தினர் இரண்டு அப்பாவித் தமிழர்களைச் சுட்டுக் கொன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வேலாயுதம் பஞ்சாட்சரம், வைரமுத்து விஸ்வலிங்கம் ஆகியோரே கொலையுண்டவர்கள் ஆவர். [ஓ-5]

## இன்று பட்டமளிப்பு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 11 ஆவது பட்டமளிப்பு விழா இரண்டு அமர்வுகளில் இன்று காலையும், நண்பகலிலும் நடைபெறுகின்றது. [ஓ]

## இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

மாடு மேய்க்கச் சென்ற இளைஞர் வயல் பகுதியில் கண்டெடுத்த ஷெல் ஒன்றை குத்திப் பார்த்தபோது அது திடீரென வெடித்ததில் படுகாயமடைந்தார்.

மானிப்பாய் கட்டுடையில் நேற்று மாலை நடந்த இந்தச் சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த எஸ். சிவகுமார் (வயது 18) என்பவரே காயமடைந்தார். [ஓ-15]

## திருமலையில் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

திருகோணமலை மாவட்டம் பேராறு என்னுமிடத்தில் கடந்த புதனன்று இராணுவத்தினருடன் இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளான மோகன் [91 ஆம் கொலனி தம்பலகாமம்], ராஜு [கன்னியா], சிறில் [செல்வநாயகபுரம்] ஆகியோர் வீரமரணமடைந்தனர். [ஓ-5]

## காகித களஞ்சியத்தில் வெடிமருந்து!

கொழும்பு, ஜூலை 6

நீர்கொழும்பு பிரதான வீதியில் உள்ள காகித களஞ்சியம் ஒன்றிலிருந்து பொலிஸார் அண்மையில் வெடிமருந்து வகைகளைக் கைப்பற்றினர். இது சம்பந்தமாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒவ்வொன்றும் 50 கிலோ கிராம் எடையுள்ள அலுமினியம் பவுடர் கொண்ட 8 பீப்பாய்களும், ஒவ்வொன்றும் 60 கிலோ எடையுள்ள வெடிமருந்துகளைக் கொண்ட 78 சாக்கு மூடைகளும் மற்றும் பொட்டாசியம் நைட்ரேட் கொண்ட பல சாக்கு மூடைகளும் அங்கிருந்து கைப்பற்றப்பட்டன. (ஓ-5)

## சீ- பிளேன் நோட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

நேற்று முற்பகல் 10 மணியளவில் தீவுப் பகுதி, யாழ்ப்பாணம் பகுதிகளை சீ-பிளேன் சுற்றிச் சுற்றி நோட்ட

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக கரையோரப் பகுதியில் மீன் பிடிக்கத் தடை

சென்னை, ஜூலை 6

தமிழகக் கடலோரத்தில் இருந்து 5 கடல் மைல் தூரத்தினுள் மீன்பிடிக்க தமிழ் நாடு மாநில அரசு தடை விதித்துள்ளது.

இத்தடை நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும், எல்லைப்புறத்தைப் பாதுகாக்கவுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தஞ்சை, சிதம்பரனார், மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கடலோரப் பகுதிகளிலேயே இந்த உத்தரவு அமுல் நடத்தப்படும்.

இப்பகுதிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு மீனவர் அடையாள அட்டை வழங்கப்படும். அடையாள அட்டைகள் இன்றி மீன்பிடிக்கச் செல்வது தடை செய்யப்பட்டிருக்கிறது.

இதே வேளை — முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் தங்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## வொய்ஸ் ஒப் அமெரிக்கா விவகாரம்:

# இந்தியாவுக்கு விவரம் தர ஸ்ரீலங்கா இணக்கம்!

சிலாபம், இரணவில என்னுமிடத்தில் நிறுவப்படவுள்ள "வொய்ஸ் ஒப் அமெரிக்கா" வானொலி நிலையம் தொடர்பான சகல விபரங்களையும் இந்தியாவுக்கு வழங்க ஸ்ரீலங்கா இணங்கியுள்ளது.

புதுடில்லியில் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் இதனை வெளியிட்டார்.

இந்தியாவின் நலன்களுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய விதத்தில் "வொய்ஸ் ஒப் அமெரிக்கா" வானொலி நிலையம் செயற்பட அனுமதிக்கப்படமாட்டாது என்று ஸ்ரீலங்கா உறுதியளித்திருப்பதாகவும் புதுடில்லியில் அரசுப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

இந்திய வெளியுறவுச் செயலாளர் முச்குண்ட் துபேயும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் நாகேந்திர நாத் ஜாவும் இது தொடர்பாக இலங்கையிடம் உத்தியோக பூர்வமான ஆட்சேபனை தெரிவித்த பின்னரே இலங்கை இந்த உறுதிமொழியை வழங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

# கொழும்பில் வீதி தோறும் கண்காணிப்புக் குழுக்கள்!

கொழும்பு மாநகரில் வீதிகள் தோறும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவை விழிப்புடன் செயற்பட ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

கொழும்பு நகரில் குண்டு வெடிப்புக்கள் நடைபெறாமல் தடுக்கும் ஒரு முயற்சியாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

தெருவில் புதியவர்களோ, சந்தேகிக்கப்படும்படியான நபர்களோ நடமாடினால் அவர்களை இக்குழு கண்காணித்து பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் கொடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-எ]

## நயினாதீவில் நேற்று

# 5 ஆயிரம் தேங்காய்கள் படையினரால் பறிமுதல்!

நெடுந்தீவு, ஜூலை 6

நெடுந்தீவு, அனலைதீவைச் சேர்ந்தவர்கள் வியாபாரத்திற்காக எடுத்துவந்த சுமார் 5 ஆயிரம் தேங்காய்களை நேற்று நயினாதீவு படையினர் பறிமுதல் செய்தனர்.

சிலர் சொந்த பாவிப்புக்காக கொண்டுவந்த ஐந்து, ஆறு தேங்காய்கள் கூட படையினரிடம் இருந்து தப்பவில்லை அவற்றையும் அவர்கள் பறித்தெடுத்து விட்டனர்.

நயினாதீவு முகாமில் வைத்து நேற்று பயணிகளை படையினர் சோதனையிட்ட போதே இந்தப் பறிமுதல் "நாடகம்" நடந்தது.

இதே வேளை—

அனலைதீவில் இருந்து வந்த கணபதிப்பிள்ளை, நெடுந்தீவில் இருந்து வந்த கிருஷ்ணன் ஆகிய இருவரையும் படையினர் தடுத்து வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### நாற்று விற்பனைக்கு

நல்ல இன பம்பாய் வெங் காய நாற்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. மயில் வாகனம், அந்தராவ் வாய்க் கால், சித்தன்கேணி. (4165)

### தேவை

வைத்தியசாலை உதவியா ளராக கடமையாற்றுவதற்கு பெண் தேவை. தபால் மூலம் விண்ணப்பிக்கவும். மெடிக் கல் கிளினிக், ஸ்ரேசன் றோட், சுன்னாகம். (17401)

### மணமகள் தேவை

யாழ். இந்து 35 வயது நிரம் பிய U.K. இல் P.H.D. என் ஜினியர் படித்த மணமக னுக்கு நட்சத்திரம் பூசம், பாவம் குறைந்த சாதகர் மணப்பெண் தேவை. தொடர்பு ABCDE, 328, நாவலர் றோட். (17398)

### ஜெனரேட்டர்

3000 W க்கும், 4500 W க்கும் இடைப்பட்ட நல்ல செயற் திறனுடைய ஜெனரேட்டர் உடன் தேவை. மண்ணெண் ணெய்யால் இயங்குவதற்கு முன்னுரிமை. க. நிர்மலானந் தன், 52/2, கண்டி வீதி, கண் டிக்குளி. [ஆஸ்பத்திரி வீதி யும், கண்டி வீதியும் சந்திக் கிக்கும் இடம்] (17396)

### துர்க்கா திருமண சேவை

எல்லா மதங்களிலும் திரு மண தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். எல்லா நாட் களிலும் தொடர்பு கொள்ள லாம் துர்க்கா திருமண சேவை வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி, மல்லா கம். (4175)

## மரண அறிவித்தல்

**மாணிக்கம் கனகசுந்தரம்**

நுணாவில் கிழக்கு சாவ கச்சேரியைப் பிறப்பிட மாகக் கொண்ட மாணிக் கம் கனகசுந்தரம் அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று மாலை 4-00 மணிக்கு "ஜோய் கொட்", கென்ஸ்மன் ஒழுங்கை, சாவகச்சேரியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர் களுக்கு அறியத் தருகின் றோம்.

தகவல் :
**குடும்பத்தினர்**

(17254)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 02 — 11 — 1939



மறைவு: 28 — 06 — 1989

### அமரர் கந்தையா குலேந்திரா

(முன்னைநாள் கோப்பாய் உதவி அரசாங்க அதிபரும், வலி - கிழக்குப் பிரதேசசபை விசேட ஆணையாளரும்)

எங்கள் மீது பாசமும், நேசமும் கொண்ட குடும் பத் தலைவராகிய தாங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் இரண்டு கழிந்த போதிலும் தங்களை எங்கள் இதயக்கோயிலில் வைத்துப் பூசித்த படியே இருக்கின்றோம்.

தங்கள் திதி நாளாகிய இன்று (06 - 07 - 1991) சனிக்கிழமை நாம் தங்களது ஆன்ம சாந்தியின் பொருட்டு இறைவனைப் பிரார்த்தனை செய்கின் றோம்.

திருமதி சிவசுஸ்வரி குலேந்திரா,
செல்வன் குலேந்திரா - சிவேந்திரா,
தாய், சகோதரர்கள்.

"சுஸ்வரி வாசம்"
நந்தாவில் அம்மன் வீதி,
கொக்குவில். (17389)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண் நாடலங்கரித்த நாள்: 08-09-1925

திருநாடலங்கரித்த நாள்: 06-07-1989



அமரர்
### முத்து சின்னத்தம்பி

இரண்டு ஆண்டுகள் சென்றதையா — நீர்
இல்லத்தை விட்டுச் சென்று
இரண்டாயிரம் ஆண்டுகள் சென்றாலும்
இழப்போமோ உம் நினைவை.

பரிவுகள் இல்லையையா
பாசங்கள் இல்லையையா
எம் நேசர் இயேசுவின் — பாசங்களோ
எம்மை தேற்றுதையா.

உம் பிரிவால் வாடும்:
**மனைவி, பிள்ளைகள்.**

பிறவுண் றோட்,
கொக்குவில் கிழக்கு. [17402]

## ஆண் தாதிகள் தேவை

தனியார் வைத்திய நிறுவனமொன்றில் கடமை புரிவதற்கு ஆண் தாதிகள் தேவைப்படுகின்றார்கள். தகுதியானவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். தகுந்த ஊதியம் வழங்கப்படும். பயிற்சி பெற விரும்புபவர்களும் விண் ணப்பிக்கலாம்.

விளம்பர இல: ச/103
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

04-07-1991. [ச-103]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 04-02-1904

மறைவு: 23-05-1991

திதி: 06-07-1991

திருமதி
### கந்தையா சின்னம்மா

அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் வாடும்,
**பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
மற்றும் உறவினர்கள்.**

உரும்பராய் தெற்கு,
உரும்பராய். [17385]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 19 — 01 — 1969

மறைவு: 28 — 06 — 1989



தர்மலிங்க சர்மா
### குகனேஸ்வரசர்மா (கண்ணன்)

**திதி: 6-7-1991 (அபரபட்ச தசமி)**

நந்தாவில் சற்புலத்து அம்மன் கோவில்
நனி சிறந்து ஓங்கியோங்கும் புகழ் பரப்ப
எந்நாளும் தவறாமல் கிரியை யாவும்
இனிதுசெய்து அடியார்கள் நாளும் வாழ்த்த
தன்னாவி அகாலமாய்ப் பிரியு மட்டும்
தங்கடனில் குறையின்றி இயங்கி வந்த
கண்ணனெனும் குகனேஸ்வர சர்மா எங்கள்
கண்களினைக் குளமாக்கிச் சென்றதேனோ.

உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

நந்தாவில் அம்மன் கோவில்,
கொக்குவில். [17147]

## நான்காம் வருட நினைவஞ்சலி



தோற்றம்: 14 - 7 - 1950

தேற்றம்: 7 - 7 - 1988

### அமரர் கஸ்பார் அன்ரன்

(பிரபல தொழிலதிபர்)

அன்புத் தந்தையே ஆறுதல்
கூறுகிறோம் அமைதியாக உறங்கும்!
அன்புத் தந்தையே இது உங்கள்
நினைவுகளின் அலங்காரம் அல்ல;
உறுதிகளின் உருவாக்கம்; நமக்குள்
நாமே செய்துகொள்கின்ற இரகசியவதை!
உங்களை இழந்து உருகி நின்றோம்;
ஆறுதல் கூறி ஆளாக்கி விட்டார்
அன்புத் தாய்! உங்கள் பூவிழிகள்
மூடிக்கொண்ட வேளை எம் விழிகள்
திறக்கப்பட்டன!
உங்கள் அஸ்தமனத்தின் போது
புதிய புலர்வுக்கான அடிக்கல்
நாட்டப்பட்டு விட்டது! நீங்கள்
காட்டிய பாதையில் எம் பாதங்கள்
பதிந்து விட்டன! எமது அன்புத்
தந்தையும், தலைவனும் நீங்களே!

உங்கள் பிரிவால் வாடும்:
**மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.**

53, 3 ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். (சி-0222)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 23 — 10 — 1926

இறப்பு: 01 — 07 — 1986



### அமரர் சி. அழகரத்தினம்

(ஓய்வு பெற்ற தபால் அதிபர்)

ஐந்தாண்டு அகன்றதோ ஐயனே எமைப்பிரிந்து
வந்த விதிப் பயனால் வானுலகம் சென்றீரோ
பந்தமாய் எமைப்புரந்த பாசமிகு தலைவா
அந்தமில் காலமெல்லாம் உமை நினைந்து
வாழ்ந்திருப்போம்.

**மனைவி, மக்கள்.**

சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (17382)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### காரணம் தெரிந்தென்ன?

வடக்கு—கிழக்கில் இன்று நிலவும் நெருக்கடிக்கு இனரீதியான கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததே காரணம் என்று ஜனாதிபதி அண்மையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மூன்று சகாப்த முழுநேர அரசியல்வாதிக்கு, வடக்கு—கிழக்கு நெருக்கடிக்கு, அதற்கு மூலாதாரமான இனப்பிரச்சினைக்கு, தமிழர் பிரச்சினைக்கு, உண்மையான காரணம் எது என்பதை இதுவரையில் கண்டு கொள்ள முடியாமற் போனதா, என்ன?

அல்லது பிரச்சினையின் தாக்கம் இப்போது அவரை நேரடியாகவே பாதிப்பதால், எப்போதோ தெரிந்து கொண்ட காரணத்தை இப்போது வெளிப்படையாகக் கூற வேண்டியதாயிற்றா?

விடுதலைப் புலிகளை இரண்டொரு மாதங்களில் ஒடுக்கி விடலாம், ஒழித்து விடலாம் என்று இராணுவ அதிகாரிகள் கூறியதை நம்பி அவர் போரைப் பிரகடனம் செய்தார். ஆனால் ஒரு வருடம் கழிந்தும் போர் நீடிக்கிறது. போரில் புலிகளை வெல்லமுடியாது என்பது புரிந்துவிட்டது. எனினும் அரசு இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று கொண்டு பேசினால்தான், தமிழர்கள் உரிமைகளைச் சிங்களவருக்கு வாய்ப்பான விதத்தில் வழங்கலாம் என்ற வாய்ப்பாட்டை மீற மனமில்லை.

அதன் காரணமாக தொடர்ந்து யுத்தத்தை நடத்துவதற்குப் பணத்துக்கு வெளிநாடுகளிடம் பிச்சை கேட்க வேண்டியுள்ளது.

என்ன செய்வது! தனியார் மயப்படுத்தல், மக்கள் மயப்படுத்தல், மானியங்களை வெட்டுதல் என்ற சிபார்சுகளை நடைமுறைப் படுத்தி உலக வங்கியிடமும், சர்வதேச நாணய நிதியத்திடமும் கடன் வாங்க வேண்டி உள்ளது. அந்தக் கடனும் வடக்கு - கிழக்கில் யுத்தம் நடத்தச் செலவிடப்படுகிறது.

அதனால் நாட்டில் பெரும் பொருளியல் சூறாவளி வீசத் தொடங்கியுள்ளது. அந்தச் சூறாவளி தென்னிலங்கையில் பெரும் புரட்சி ஒன்றைத் தோற்றுவிக்கும் ஊழிக் காற்றாக எந்த நேரமும் மாறும் ஆபத்தும் உண்டு.

அப்படி ஓர் ஆபத்து வரப் போகிறது, பதவிக்கு வேட்டு வைக்கப் போகின்றது என்பதை நினைத்துத் தலைசுற்றும்போது தான், இனப்பிரச்சினைக்கான உண்மையான காரணத்தை வாய்விட்டுச் சொல்ல நேர்ந்திருக்கிறது போலும்!

உண்மைக் காரணம் தெரிந்து விட்டது என்பதால் மட்டும் ஆபத்திலிருந்து தப்ப முடியுமா? இயலாது!

தமிழர்களின் தன்னாட்சி உரிமை உட்பட்ட சகல உரிமைகளையும் வழங்கி, தாம் கண்டறிந்த காரணியான இனப் பாகுபாட்டை நீக்கினால் மட்டுமே, வரப்போகும் பேராபத்திலிருந்து தப்பமுடியும். காலத்தை வீணாக்காமல் ஜனாதிபதி அதனைச் செய்வாரா?

## நிவாரண விநியோகம்; அளவுகளில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

இம் மாதத்துக்கான உலர் உணவு நிவாரண விநியோகத்தில் பொருள்களின் அளவுகளில் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளன.

இடம் பெயர்ந்தவர்களுக்கு மற்றும் வாரங்களுக்கும் தொழில் இழந்தோர், 1 500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறுவோர் ஆகியோருக்கு ஒரு வாரமும் நிவாரணம் வழங்கப்படவிருக்கின்றன.

1, 500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுவோர் வழங்கப்படும் பொருள்கள் எல்லாவற்றையும் வாங்க வேண்டும் என்று கட்டாயமில்லை. விரும்பிய பொருள்களை மட்டும் பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்தோருக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்ட பொருள்களின் அளவுகளில் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டின் பிரகாரம்—

ஐந்து அங்கத்தவர் அடங்கிய ஒரு குடும்பத்துக்கு 9 கிலோ அரிசி; 5 கிலோ மா; 2 கிலோ சீனி; 750 கிராம் பருப்பு; 1 பைக்கெட் பால்மா வழங்கப்படும்.

நான்கு அங்கத்தவர்கள் கொண்ட குடும்பத்துக்கு 6 கிலோ அரிசி; 5 கிலோ மா; ஒன்றரைக் கிலோ சீனி; அரைக் கிலோ பருப்பு; 1 பைக்கெட் பால்மா என்பன வழங்கப்படும்.

மூன்று அங்கத்தவர்கள் குடும்பத்துக்கு அரிசி 5 கிலோ; மா 3½ கிலோ; சீனி 1 கிலோ; பருப்பு ½ கிலோ; பால்மா 1 பைக்கெட் என்ற அளவில் வழங்கப்படும்.

ஒரு அங்கத்தவர் கொண்ட குடும்பத்துக்கு அரிசி 2 கிலோ; மா 2½ கிலோ; சீனி ½ கிலோ; பருப்பு ¼ கிலோ என்ற வகையில் வழங்கப்படும். (ஒ-3)

ப. நோ. கூ. சங்கங்கள், பாடசாலைகளை

## தீவகத்தில் மீண்டும் இயங்கச் செய்ய முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 6

தீவுப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கடைகள், பாடசாலைகள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் என்பவற்றை மீண்டும் தீவகத்தில் இயங்கச் செய்வதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு தீவக மக்கள் முன்னணி சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளது.

ப.நோ கூ. சங்கங்கள், பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களை இம்மாதம் 8 ஆம் திகதிக்கு முன் தீவுப் பகுதிக்கே மாற்றிவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தீவக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### பண்ருட்டி பகிஷ்கரிப்பு

சென்னை, ஜூலை 6

சட்டசபையில் வைத்து தாம் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு முதலமைச்சர் ஜெயலலிதா வெளிப்படையாக வருத்தம் தெரிவிக்கும் வரை சபையை பகிஷ்கரிக்கப் போவதாக பாட்டாளி மக்கள் கட்சி எம். எல். ஏ. பண்ருட்டி இராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதே வேளை—

பண்ருட்டி இராமச்சந்திரன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உண்ணாவிரதமிருந்து வரும் பாட்டாளி மக்கள் கட்சி ஸ்தாபக தலைவர் டாக்டர் இராம்தாஸ், உண்ணாவிரதத்தைக் கைவிட நேற்று மறுத்துவிட்டார். [ஒ-எ]

### மதுவரிப் பரிசோதகர் பரீட்சை

மதுவரி பரிசோதகர் பதவி உயர்வு பரீட்சைக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்களுக்கு இன்று 6 ஆம் திகதி மதுவரித் திணைக்களத்தின் கொழும்பு தலைமையகத்தில் பரீட்சை நடைபெற உள்ளதாக கொழும்பு மதுவரித் திணைக்கள ஆணையாளர் சுற்று நிருப மூலம் தெரிவித்துள்ளார். [இ-30]

### மீனவர் சூடுபட்டு காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் நேற்றுக் காலை மீன் பிடித்துக் கொண்டிருந்த ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார்.

வெற்றிலைக்கேணி வாசியான ஐயாக்குட்டி சிவசுப்பிரமணியம் (வயது 32) என்னும் அந்த நபர், யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [ஒ-15]

### தரமற்ற...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சீனாவிடம் இருந்தே 37 மி. மீ. குண்டுகளை வாங்குமாறு சிபார்சு செய்திருந்தது.

ஆனால் அந்தக் குழு பின்னர் தனது முடிவை மாற்றி பாகிஸ்தானிடமிருந்து பிரஸ்தாப குண்டுகளைக் கொள்வனவு செய்யுமாறு கூறியிருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இதேவேளை 1973 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட குண்டுகளைச் சீனாவிடமிருந்து வாங்கியதாகவும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாம். [அ-3]

### ஈழ அகதிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலைதீவில் நடந்த சார்க் வெளியுறவு அமைச்சர் நிலை மாநாட்டின் போது இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ் சிங் சோலங்கி விடுத்த அழைப்பை திரு. ஹேரத் ஏற்றுக்கொண்டார் என்றும்—

இம்மாதமே அவர் புதுடில்லிக்குச் செல்வார் என்றும் நேற்று அறிவிக்கப்பட்டது. (ஒ-3)

## இரவில் ஷெல்!

யாழ்ப்பாணம், ஜூலை 6

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 10 மணி தொடக்கம் 'பரா' வெளிச்சக் குண்டுகள் ஏவப்பட்டு ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன.

கட்டுவன், குப்பிளான் பகுதிகளில் அநேக ஷெல்கள் விழுந்து வெடித்தன என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-15]

### வவுனியாவில் 12 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 6

கொழும்பு குண்டு வெடிப்பு தொடர்பாக கடந்த திங்கட்கிழமை வவுனியாவில் 12 பேர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சர்வோதயம், ரயில் நிலையப் பகுதிகளில் படையினர் தேடுதல் நடத்திய போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். [ஒ-3]

### 3 நாட்கள் சபைக்கு வரத் தடை

சென்னை, ஜூலை 6

தமிழக சட்டசபைக் கூட்டத்தில் மூன்று தினங்களுக்கு கலந்துகொள்ளக்கூடாது என்று பாட்டாளி மக்கள் கட்சி எம். எல். ஏ. பண்ருட்டி இராமச்சந்திரனுக்கும், சுயேச்சை எம். எல். ஏ யான ஆர். தாமரைக்கனிக்கும் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா நேற்று உத்தரவிட்டார்.

ஆளுநர் உரை நிகழ்த்துவதற்கு முன் குறுக்கீடு செய்ததற்காக பண்ருட்டி இராமச்சந்திரன் மீதும்—

பண்ருட்டி இராமச்சந்திரனைத் தாக்கியதற்காக தாமரைக்கனி மீதும் இத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக சபாநாயகர் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்

### ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 6

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினமிரவு 9 மணிமுதல் சுற்றுப்புறப் பகுதிகளை நோக்கி சரமாரியான ஷெல் வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டன. இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

நேற்று மாலை 4 30 மணியளவிலும் இயக்கச்சிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. [ஒ-15]

### திருமலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் ஏற்கனவே அங்கு அளவுக்கு அதிகமான அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவை ஒருபுறமிருக்க பிரஸ்தாப முகாமில் இருந்து விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட பல அகதிகள் "காணாமற் போய்" விட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஆகையால் திருமலையில் உள்ள அகதிகள் முகாம்களை பராமரிக்குமாறு ஐ. நா. அகதிகள் தாபனம், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு என்பனவற்றிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## ரோஹணவின் சொத்துகள் அரசு உடைமையாகின!

கொழும்பு, ஜூலை 6

ஜே. வி. பி. யின் தலைவர் ரோஹண விஜேவீராவின் சொத்துக்கள் அனைத்தும் அரசு உடைமையாக்கப்பட்டுள்ளன.

கண்டி பிரதேசத்தில் உள்ள அவரது வீடு, செயின் மேரீஸ் தோட்டம், வாகனங்கள் உட்பட 10 லட்சத்து 95 ஆயிரம் ரூபா பெறுமதியான அவரது சொத்துக்களே அரசு உடைமையாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பிரகடனத்தை கண்டி மேல்நீதிமன்றம் கடந்த வாரம் விடுத்தது. (ஒ-3)

## ராஜீவின் உடைகளையும் கேட்கிறார் சோனியா!

சென்னை, ஜூலை 6

ராஜீவ்காந்தியின் உடைகளைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி, அவரது மனைவி சோனியாகாந்தி செங்கல்பட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

ராஜீவின் காலணிகளைத் தருமாறு அவர் ஏற்கனவே தாக்கல் செய்த மனு ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடம் காலணிகள் ஒப்படைக்கப்பட்டன.

இரண்டாவது மனுவின் மீதான விசாரணையின் போது சி. பி. ஐ. துணைக் கொமாண்டர் திரு. ரஜோத்தமன் —

"ராஜீவின் ஜிப்பா, பைஜாமா ஆகியன குண்டு துளைக்கப்பட்டு தாறுமாறாக கிழிந்து 27 சிறிய துண்டுகளாக உள்ளன. அவை இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. பரிசோதனை முடிந்த பின்னரே அவற்றை வழங்க முடியும்" என்றார்.

நீதிவான் மேல் விசாரணையை இம்மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். [ஒ-3]

## சிறப்பாக நடந்து முடிந்த றோட்டறி பொன்விழா

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ். றோட்டரிக் கழகத்தின் 50-ஆவது ஆண்டு நிறைவையொட்டிய பொன் விழா நிகழ்ச்சிகள் அண்மையில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றன.

றோட்டரிக் கழகத் தலைவர் திரு. வி. ரி. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கௌரவ விருந்தினராக மாமனிதர் எஸ். திருநாவுக்கரசு கலந்துகொண்டார்.

விழாவில் இளம்பிள்ளை வாதநோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு மூச்சக்கர வண்டி ஒன்று பரிசளிக்கப்பட்டது.

அத்துடன் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான காசோலை றோட்டரிப் புலமைப் பரிசில் நிதியிலிருந்து யாழ். பல்கலைக்கழகத்துக்கு வழங்கப்பட்டது

றோட்டரிக் கழகம் நடத்திய பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

பலர் கலந்து [illegible] விழா நிகழ்ச்சிகளை திரு. எஸ். உருத்திரலிங்கம் தொகுத்தளித்தார். இறுதியில் கலை நிகழ்ச்சியும் இடம்பெற்றது. (த)

### 7 ஆண்டுகளின் பின் அவசர சட்டம் நீக்கம்

பொகொடா, ஜூலை 6

7 ஆண்டுகளாக அமுல் நடத்தப்பட்டுவந்த அவசர கால சட்டத்தை கொலம்பியா அரசு நேற்று நீக்கியது.

புதிய அரசமைப்பும் நேற்று முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. [இ-எ]

### சீ- பிளேன்...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிட்டுச் சென்றது.

அதைத்தொடர்ந்து காரைநகர், ஊர்காவற்றுறை முகாம்களில் இருந்து படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தினர். (ஒ-15-51)

### தமிழக...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் பெயர் மற்றும் விவரங்களை அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து கொள்ள, வழங்கப்பட்ட ஒரு வார கால எல்லை மேலும் ஒரு வாரத்தினால் நீடிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

### தமிழ் வள ஆய்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினரும், யாழ். கல்வித் திணைக்களமும் சேர்ந்து நடத்தும் தமிழ் வள ஆய்வுக் கருத்தரங்கு நாளை 7 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காலை 9 மணி முதல் மாலை 4-30 மணி வரை நடைபெறும்.

இக்கருத்தரங்குக்கு கலாநிதி இ. பாலசுந்தரம் தலைமை வகிப்பார். கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தொடக்கவுரை வழங்குவார்.

பேராசிரியர் [illegible] பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் [illegible] சிற்றம்பலம், பேராசிரியர் வி. ஆறுமுகம், கலாநிதி க. சபேந்திரராஜா ஆகியோரும் திணைக்கள சார்பில் தமிழ்மொழிச்சேவைக் கால ஆலோசகர்கள், தமிழ் வள ஆளணியினர், பிரதம கல்வி அதிகாரிகள், கல்வி அதிகாரிகள் தமிழ் வளமுடைய பண்டிதர்கள், வித்துவான்கள் போன்றோரும் பங்கு கொண்டு கருத்துரை வழங்குவர்.

அத்துடன் விடுதலைப் புலிகள் பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள். [இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடியில்:

27 – 09 – 1934

ஆண்டவனடியில்:

07 – 06 – 1991

### அமரர் காசிப்பிள்ளை கங்காபதி

(Ceylon Tobacco Company Ltd.)

கருவாகி உருவாகி கருவறையில் சிசுவாகி
ஒருமரத்தின் கிளைகள்போலே ஒன்றாக வாழ்ந்து வந்தோம்
உறவுகளைத் தள்ளி உணர்வுகளை அள்ளி ஒரு கணத்தில்
மறைந்தாயோ எம்மைவிட்டு இறைவனோடிணைந்திடத்தான் சென்றாயோ.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் உடுப்பிட்டி இல்லத்தில் 7-7-1991 நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவுத்துயரால் வாடும்:
குடும்பத்தினர்.

அல்வாய் வீதி,
உடுப்பிட்டி.

[17409]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 12 |  | 07 |
| 10 | | 06 |
| 1901 | | 1991 |

### அமரர் கனக்சபை கந்தசாமி

[இளைப்பாறிய ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி]

திங்கள் ஒன்று சென்றாலும் திசாதையா உம் நினைவு
திங்களோ தான் மறையும் தினங்கள் நில விண்ணில்
எங்கள் இதயமோ நிதம் வாடும்
உங்கள் பிரிவுதுயர் நிலையில்
தங்கம் நிகர் தந்தையே தாழுகின்றோம் உம்மடிக்கு.

அன்னாரின் வீட்டுக் கிருத்தியம் 07-07-1991 ஞாயிற்றுக்கிழமை சண்டிலிப்பாயில் நடைபெறும். இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்.

மாசியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

[17408]

வலி - வடக்கு

## ஓய்வூதியர்கள் ஒன்றுகூடல்

இடம்: மல்லாகம் இந்து மகாவித்தியாலயம்

காலம்; 07 - 07 - 1991 மு. ப. 9-30 மணி

1. தலைவர் உரை.
2. பிரதம விருந்தினர் உரை.
3. சிறப்பு விருந்தினர் உரை.
4. கலந்துரையாடல்.
5. பிரேரணைகள் பரிசீலனை.

சகல ஓய்வூதியர்களும் வருகை தருக.

வை. பொன்னையா,
தலைவர்.

(17493)

## Jaffna College INSTITUTE OF TECHNOLOGY
Vaddukkoddai

## INTERVIEW

1. 15-07-1991 அன்று ஆரம்பமாகவுள்ள எமது சகல பயிற்சி நெறிகளுக்குமான நேர்முகப் பரீட்சைகள் 08-07-1991 (திங்கட்கிழமை), 09-07-1991 (செவ்வாய்க்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 9-00 மணியிலிருந்து பகல் 1 மணி வரை நிறுவனத்தின் தலைமையகத்தில் (வட்டுக்கோட்டையில்) நடைபெறும்.
2. எமது யாழ்ப்பாணக் கிளையில் விண்ணப்பித்தோருக்குமான நேர்முகப்பரீட்சைகளும் மேற்குறித்த தினத்திலே வட்டுக்கோட்டையிலேயே நடைபெறும்.
3. இதற்கான அறிவித்தல்கள் சகல விண்ணப்பதாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.
4. இக் கடிதங்கள் கிடைக்காத விண்ணப்பதாரிகளும் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி இவ் அறிவித்தல் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
5. நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்காதவர்கள் எக் காரணம் கொண்டும் பின்னர் பயிற்சி நெறிகளுக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.
6. ஏற்கனவே விண்ணப்பிக்க முடியாது போனவர்களும் மேற் குறித்த தினங்களில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து நேர்முகப்பரீட்சைக்குத் தோற்ற வாய்ப்பு உண்டு.

— பணிப்பாளர்.

[சி-0220]

## தையல் பயிற்சி நிலையம்

யாழ்ப்பாணம் வைஸ்மன் கழகத்தின் ஆதரவில் நல்லூர் செல்லர் வீதியில் நடத்தப்பட்ட

தையல் பயிற்சி நிலையம்
10 – 07 1991 புதன்கிழமை
மறுபடியும் ஆரம்பமாகவிருக்கிறது.

தையல், தையல், கைவேலைப் பயிற்சிகள் இங்கு போதிக்கப்படும்.

கடந்த வருடம் இங்கு பயிற்சிபெற்று, பயிற்சியை முடிக்காத மாணவிகளும், புதிய மாணவிகளும் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

வைத்திய கலாநிதி,
J. W. ஜெயகுலராசா,
செயலாளர்,
யாழ். வைஸ்மன் கழகம்,
வை. எம். சி. ஏ.
யாழ்ப்பாணம்.

(சி-0219)

## சென் ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்
### பழைய மாணவர் சங்கம்
### வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி பொதுக் கூட்டம் 20 - 07 - 1991 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு றொபட் வில்லியம் மண்டபத்தில் ஆரம்பமாகும்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் அவற்றினை 13 - 07 - 1991க்கு முன்னதாக எழுத்து மூலம் செயலாளரிடம் சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

காலை, மதிய போசனங்களில் பங்குபற்ற விரும்பும் அங்கத்தவர்கள் 18-07-1991க்கு முன்னர் ரூபா 65/= பொருளாளர் திரு. ந. ஜே. ஞானப்பொன்ராசாவிடம் செலுத்தி உதவும்படி அன்புடன் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

நிகழ்ச்சி நிரல் அழைப்பிதழுடன் அங்கத்தவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

சு. ந. போ. மொறிஸ்,
செயலாளர்.

சென் ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
05-07-1991

(17399)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகம்மா வீரகத்திப்பிள்ளை

திருநெல்வேலி வடக்கை (கொக்குவில் வீதி) வதிவிடமாகக் கொண்டவராகிய திருமதி கனகம்மா வீரகத்திப்பிள்ளை 5 - 7 - 91 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. வீரகத்திப்பிள்ளையின் அன்பு மனைவியும், சிவபாக்கியம் (தேசமணி – ஆசிரியை, இராமகிருஷ்ண மகா வித்தியாலயம், கோண்டாவில்), முத்துலிங்கம் (வடபிராந்திய போக்குவரத்துச் சபை, கோண்டாவில்), தவமலர், பரமயோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சற்குணதேவி முத்துலிங்கம் (ஆசிரியை, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), திரு. பதுமநாதன் ஆகியோரின் அன்பு மாமியும், நவகாந் (மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி), ஷாமிளா (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி), மைதிலி (மாணவி, இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (6-7-91) சனிக்கிழமை முற்பகல் 11-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கொக்குவில் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
திரு. வீ. முத்துலிங்கம்
(மகன்)

(17150)

### செல்வி கனகாம்பிகை முத்துவேலு

செல்வி கனகாம்பிகை முத்துவேலு 5-7-91 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற அ. முத்துவேலு (Clerk of Works Railway, Malaysia) - நீலாயதாட்சி ஆகியோரின் மகளும், காலஞ்சென்ற திருமதி ஆறுமுகம் தகுலாம்பிகை, திருமதி நாகேந்திரம் ஞானாம்பிகை, திருமதி நவரட்ணம் கமலாம்பிகை, திருமதி அருணாசலம் இரத்தினாம்பிகை (ஆசிரியை), திரு. மு. சண்முகநாதன் (தவம் – முன்னாள் றிட் உடையாரும், வட்டுக்கோட்டை கிராமசபை அங்கத்தவரும்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி சண்முகநாதன் இராசலட்சுமியின் அன்பு மைத்துனியும், கணேஷ்குமார், சரவணபவன் (கனடா), கௌரி, பவானி, சிறீபரன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [6-7-91] சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அவர்களின் குடும்ப மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அற்கின்சன் வீதி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
மு. சண்முகநாதன்
[தவம்]

[17253]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 6 - 07 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org